**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**O.S. No. 39 of 2020**
**Deposition of Witness for : DW 4**

| | | |
|---|---|---|
| Name | : | சுஜாதா |
| Father/Husband Name | : | வஜ்ரசேனன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | ------ |
| Calling | : | |
| Religion | : | ------ |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை மத்திய கூட்டுறவு வங்கியில் கிளை மேலாளராக கடந்த 15 வருடமாக பணிபுரிந்து வருகிறேன் . இந்நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கடந்த 08.05.2019 தேதியில் எங்களது வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்துள்ள வெங்கடேஷ் என்பவரது சம்மந்தப்பட்ட ஆவணங்களை எடுத்து நேரில் வந்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் படி கேட்கப்பட்டு இருந்தது. வெங்கடேஷ் என்பவர் எங்களது வங்கியில் ரூ. 5 லட்சம் மற்றும் ரூ. 2 லட்சம் வைப்பீடு செய்துள்ளார். அதில் ஐஸ்வர்யா என்பவரை நாமினியாக போட்டு உள்ளார்.

1. மேற்படி வெங்கடேஷ் என்பவரது வைப்பீடு செய்யப்பட்டதற்கான ரசீதுகள் (2 எண்ணிக்கை) வாடிக்கையாளரின் Withdrawal slip மற்றும் வங்கி அட்ஜஸ்ட்மெண்ட் வவுச்சர் நகல்கள் பி.வா.சா.ஆ.8

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை** -

08.05.2019ல் ரூ. 5 லட்சம் மற்றும் ரூ. 2 லட்சம் வெங்கடேஷ் வைப்பீடு செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வைப்பீடு நிரந்தர வைப்பீடு ஆகும். 08.05.2020 வரை அவ்வாறு டெப்பாசிட் செய்யப்பட்டுள்ளது. 28.06.2019ந் தேதி ரூ. 6 லட்சம் பணத்தை வெங்கடேஷ் அவர்கள் எடுத்துள்ளார் என மேற்படி Withdrawal Slip

ல் கண்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வெங்கடேஷ் என்பவரின் பாஸ் புக்கின் பதிவு அடங்கிய ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தில் 17.09.2019ந் தேதி ரூ. 1,04,000/- Withdrawal செய்யப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.8ல் வெங்கடேஷின் நாமினி விவரங்கள் கண்டுள்ளதா என்றால் இல்லை. தொகையை வங்கி கணக்கில் வெங்கடேஷ் விட்டு விட்டு இறந்தால் தான் நாமினி அதில் உரிமை கோர முடியும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8ன் படி வெங்கடேஷ் வைப்பீடு செய்யப்பட்ட தொகையை அவராகவே withdrawal செய்யப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வெங்கடேஷ் அவர்களின் சேமிப்பு வங்கி கணக்கு இன்றளவும் எங்கள் வங்கியில் தொடர்ந்து இருந்து வருகிறது. நிரந்த வைப்பீட்டில் இருந்து உரிய வைப்பீட்டு காலம் முடிவதற்கு முன்பாகவே withdrawal செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.